# EXTREME CIRCLE MCQ

## Day 21 - 9th Tamil Term – II

1. கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தக்குடி எனத் தமிழினத்தின் தொன்மையை கூறும் நூல் எது?
a) திருக்குறள்
b) புறநானூறு
c) புறப்பொருள் வெண்பாமாலை
d) பன்னிரு பாட்டியல்
e) விடை தெரியவில்லை

2. 'விதையாமை, உரையாமை' இலக்கணக் குறிப்பு தருக?
a) எதிர்மறை வினையெச்சம்
b) உவமைத்தொகை
c) வினையாலணையும் பெயர்
d) எதிர்மறைத் தொழிற்பெயர்
e) விடை தெரியவில்லை

3. நீதி நூல்கள் ____________ என தொகுக்கப்பட்டுள்ளது.
a) பதினெண் மேல் கணக்கு நூல்கள்
b) பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்
c) சிற்றிலக்கியங்கள்
d) சைவத் திருமுறைகள்
e) விடை தெரியவில்லை

4. "பூவாது காய்க்கும் மரம் உள; நன்று அறிவார்" என்ற பாடலில் வந்துள்ள அணி ?
a) ஏகதேச உருவக அணி
b) சொற்பொருள் பின்வருநிலையணி
c) பொருள் பின்வருநிலையணி
d) எடுத்துக்காட்டு உவமையணி
e) விடை தெரியவில்லை

5. மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணாக்கர் யார் ?
a) மாங்குடி மருதனார்
b) காரியாசன்
c) பிசிராந்தையார்
d) முடியரசன்
e) விடை தெரியவில்லை

6. பின்வருவனவற்றுள் சரியான கூற்று/கூற்றுகளைத் தேர்வு செய்க:
I. 10 வயதிற்குள்ளாகவே சொற்பொழிவு ஆற்றும் ஆற்றல் பெற்றவர் வள்ளலார்.
II.11-வது வயதிலேயே அரசவையில் கவிதை எழுதி பாரதி என்னும் பட்டம் பெற்றவர் பாரதிதாசன்.
a) I மற்றும் II சரி
b) I மற்றும் II தவறு
c) I சரி II தவறு
d) I தவறு II சரி
e) விடை தெரியவில்லை

7. “நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னைச் சந்திப்பவனே என் தலைசிறந்த நண்பன்” என்று கூறியவர் யார் ?
a) அம்பேத்கர்
b) ஆபிரகாம் லிங்கன்
c) கலீலியோ
d) காந்தியடிகள்
e) விடை தெரியவில்லை

8. அண்ணாவின் பொன்மொழிகளில் தவறானது எது ?
a) எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.
b) மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு
c) கத்தியைத் தீட்டு, உந்தன் புத்தியைத் தீட்டாதே
d) சட்டம் ஒரு இருட்டறை
e) விடை தெரியவில்லை

9. ஞானப்பச்சிலை என வள்ளலார் போற்றும் மூலிகை எது?
a) கீழாநெல்லி
b) தூதுவளை
c) துளசி
d) வேப்பிலை
e) விடை தெரியவில்லை

10. “எண் வீட்டுத் தோட்டத்தில் மளர்கள் மனம் வீசின”. - பிழையை நீக்கி சரியான தொடரைத் தேர்வு செய்க.
a) எண் வீட்டுத் தோட்டத்தில் மலர்கள் மனம் வீசின.
b) என் வீட்டுத் தோட்டத்தில் மளர்கள் மனம் வீசின.
c) எண் வீட்டுத் தோட்டத்தில் மளர்கள் மணம் வீசின.
d) என் வீட்டுத் தோட்டத்தில் மலர்கள் மணம் வீசின.
e) விடை தெரியவில்லை

11. ஏ-என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் யாது?
a) வில்
b) வேல்
c) கேடயம்
d) அம்பு
e) விடை தெரியவில்லை

12. பின்வருவனவற்றுள் சரியான கூற்று/கூற்றுகளைத் தேர்வு செய்க:
I. இரு மொழிச் சட்டத்தை உருவாக்கியவர் அண்ணா.
II. சென்னை மாகாணத்தைத் தமிழ்நாடு என்று மாற்றியவர் அண்ணா.
a) I மற்றும் II சரி
b) I மற்றும் II தவறு
c) I சரி II தவறு
d) I தவறு II சரி
e) விடை தெரியவில்லை

13. பின்வருவனவற்றுள் சரியான கூற்று/கூற்றுகளைத் தேர்வு செய்க:

I. முத்துலெட்சுமி அம்மையார் அடையாற்றில் அவ்வை இல்லத்தை 1930ல் தொடங்கினார்.

II. முத்துலெட்சுமி அம்மையார் புற்றுநோய் மருத்துவமனையை 1952 ல் தொடங்கினார்.

a) I மற்றும் II சரி
b) I மற்றும் II தவறு
c) I சரி II தவறு
d) I தவறு II சரி
e) விடை தெரியவில்லை

14. திரை கடலோடியும் திரவியம் தேடு - இந்த பாடல் வரிகளை இயற்றியவர் யார்?

a) பாரதியார்
b) பாரதிதாசன்
c) ஔவையார்
d) நாமக்கல் கவிஞர்
e) விடை தெரியவில்லை

15. 'நடந்த' - என்பதன் இலக்கணக்குறிப்பு என்ன?

a) வினைமுற்று
b) பெயரெச்சம்
c) வினையெச்சம்
d) தொழிற்பெயர்
e) விடை தெரியவில்லை

16. பின்வருவனவற்றுள் சரியான கூற்று/கூற்றுகளைத் தேர்வு செய்க:

I. ஆசியாவிலேயே மிகப் பழமையான நூலகம் கன்னிமாரா நூலகம்.

II. உலக அளவில் தமிழ் நூல்கள் அதிகம் உள்ள நூலகம் சரஸ்வதி மகால் நூலகம்.

a) I மற்றும் II சரி
b) I மற்றும் II தவறு
c) I சரி II தவறு
d) I தவறு II சரி
e) விடை தெரியவில்லை

17. 'தென்னகத்துப் பெர்னாட்ஷா' என்று அழைக்கப்படுபவர் யார் ?

a) பெரியார்
b) அம்பேத்கர்
c) அண்ணா
d) ராஜாஜி
e) விடை தெரியவில்லை

18. வேர்ச்சொல்லின் தொழிற்பெயர் காண்க:

'நட'

a) நடந்து
b) நடப்பான்
c) நடந்தவன்
d) நடத்தல்
e) விடை தெரியவில்லை

19. ஒருமை - பன்மை பிழையற்ற தொடர் எது?

a) நான் வாங்கிய நூல் இது அல்ல
b) நான் வாங்கிய நூல் இது அன்று
c) நான் வாங்கிய நூல்கள் இது அன்று
d) நான் வாங்கிய நூல்கள் இவை அல்லை
e) விடை தெரியவில்லை

20. தொல்காப்பியத்தில் எழுத்து, சொல் அதிகாரங்கள் எதனை விளக்குகிறது ?

a) மொழி இலக்கணம்
b) தமிழரின் புறம் சார்ந்த நெறிகளை
c) அறிவியல் கருத்துகளை
d) தமிழரின் அகம் சார்ந்த நெறிகளை
e) விடை தெரியவில்லை

21. "உடம்பார் அழியின் உயிரார் அழிவர்,
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்", என்ற பாடல் வரிகளை இயற்றியவர் யார்?

a) பாரதியார்
b) பாரதிதாசன்
c) நாமக்கல் கவிஞர்
d) திருமூலர்
e) விடை தெரியவில்லை

22. "கலைச்செல்வி கட்டுரை எழுதிலள்" என்பது எவ்வகை தொடர்?

a) நேர்மறைத்தொடர்
b) பொருள் மாறா எதிர்மறைத்தொடர்
c) எதிர்மறைத்தொடர்
d) பொருள் மாறும் எதிர்மறைத்தொடர்
e) விடை தெரியவில்லை

23. தமிழ்மொழியில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கண நூல் எது ?

a) தொன்னூல் விளக்கம்
b) அகத்தியம்
c) தொல்காப்பியம்
d) இலக்கண விளக்கம்
e) விடை தெரியவில்லை

24. பாரதிதாசனின் எந்த நாடக நூலுக்குச் சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டுள்ளது ?

a) குடும்ப விளக்கு
b) பாண்டியன் பரிசு
c) இருண்ட வீடு
d) பிசிராந்தையார்
e) விடை தெரியவில்லை

25. "ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே" என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது ?

a) சீவக சிந்தாமணி
b) சிலப்பதிகாரம்
c) மணிமேகலை
d) தொல்காப்பியம்
e) விடை தெரியவில்லை

26. மின்மினி என்ற நூலின் ஆசிரியர் யார்?

a) அப்துல் கலாம்
b) மயில்சாமி
c) ஆயிஷா நடராஜன்
d) சுஜாதா
e) விடை தெரியவில்லை

27. இருபத்தெட்டு என்பதன் தமிழ் எண் காண்க.
a) கஉ
b) உ0
c) கக
d) உஅ
e) விடை தெரியவில்லை

28. "உரிச்சொற்கள் செய்யுளுக்கே உரியன" என்று கூறியவர் யார் ?
a) தண்டி
b) நன்னூலார்
c) அகத்தியர்
d) பவணந்தி முனிவர்
e) விடை தெரியவில்லை

29. "வெந்திற லான், பெருந் தச்சனைக் கூவி, "ஓர் எந்திர வூர்திஇ யற்றுமின்" என்றான்" என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது ?
a) சிலப்பதிகாரம்
b) சீவக சிந்தாமணி
c) மணிமேகலை
d) வளையாபதி
e) விடை தெரியவில்லை

30. பின்வரும் சொற்பொருளில் தவறானது எது?
a) உய்ம்மின்- பிழைத்துக்கொள்ளுங்கள்
b) மல்லல் - பெருமை
c) வள் - நெருக்கம்
d) விசும்பு – வானம்
e) விடை தெரியவில்லை

31. பின்வருவனவற்றுள் சரியான கூற்று/கூற்றுகளைத் தேர்வு செய்க:
I. இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தை விக்ரம் சாராபாய் ஆவார்.
II. இந்தியாவின் முதல் செயற்கைக்கோள் ரோகிணி,1975.
a) I மற்றும் II சரி
b) I மற்றும் II தவறு
c) I சரி II தவறு
d) I தவறு II சரி
e) விடை தெரியவில்லை

32. இடைச்சொற்கள், பெயரையும் வினையையும் சார்ந்து இயங்கும் இயல்பை உடையன. தாமாகத் தனித்து இயங்கும் இயல்பை உடையன அல்ல என்று கூறியவர் யார்?
a) சேக்கிழார்
b) தொல்காப்பியர்
c) கம்பர்
d) நன்னூலார்
e) விடை தெரியவில்லை

33. மணிமேகலை தொடர்பான கூற்றுகளில் சரியில்லாதது எது?
a) மணிமேகலை, ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் வெவ்வேறு நூல்களாயினும் ஒரே கதைத் தொடர்புடையன. எனவே, இவை இரட்டைக்காப்பியங்கள் என வழங்கப்பெறுகின்றன.
b) மணிமேகலையின் துறவு வாழ்க்கையைக் கூறுவதனால், இந்நூலுக்கு மணிமேகலைத் துறவு என்னும் வேறு பெயரும் உண்டு.
c) இந்நூல் சொற்சுவையும் பொருட்சுவையும், இயற்கை வருணனைகளும் நிறைந்தது.
d) இந்நூல் சமண சமயச் சார்புடையது. நாற்பது காதைகளைக் கொண்டது.
e) விடை தெரியவில்லை

34. பின்வருவனவற்றுள் சரியான கூற்று/கூற்றுகளைத் தேர்வு செய்க:
I. உரிச்சொற்களில் ஒரு சொல் பல பொருளில் வரும் என்ற ஒரு சொல்லுக்கு எடுத்துக்காட்டு நனி
II. உரிச்சொற்களில் பல சொற்கள் ஒரு பொருளை மட்டும் குறிக்கும் என்பதற்கு எடுத்துக்காட்டு உறு, தவ
a) I மற்றும் II சரி
b) I மற்றும் II தவறு
c) I சரி II தவறு
d) I தவறு II சரி
e) விடை தெரியவில்லை

35. "பெண் எனில் பேதை என்ற எண்ணம் இந்த நாட்டில் இருக்கும் வரைக்கும் உருப்படல் என்பது சரிப்படாது" என்ற கவிதையின் ஆசிரியர் யார் ?
a) கண்ணதாசன்
b) வாணிதாசன்
c) பாரதிதாசன்
d) வள்ளலார்
e) விடை தெரியவில்லை

36. விடைக்கேற்ற வினாவைத் தேர்வு செய்க:
'மாறன் பத்தாம் வகுப்பில் படிக்கிறான்'
a) மாறன் என்ன படிக்கிறான்?
b) மாறன் படிப்பது யாது?
c) மாறன் எத்தனையாவது வகுப்பு படிக்கிறான்?
d) மாறன் எந்த வகுப்பில் படிக்கிறான்?
e) விடை தெரியவில்லை

37. பின்வருவனவற்றுள் சரியான கூற்று/கூற்றுகளைத் தேர்வு செய்க:
I. வினாப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது
II. எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாது
a) I மற்றும் II சரி
b) I மற்றும் II தவறு
c) I சரி II தவறு
d) I தவறு II சரி
e) விடை தெரியவில்லை

38. மீனவர்களுக்காக உருவாக்கப்பட்ட செயலி எது ?
a) நேவிக்
b) சத்தரா
c) சித்தாரா
d) வித்யான்
e) விடை தெரியவில்லை

39. பொருத்துக.

| | | |
|---|---|---|
| (A) சிறுபஞ்சமூலம் | – 1. | காப்பிய இலக்கியம் |
| (B) குடும்ப விளக்கு | – 2. | சங்க இலக்கியம் |
| (C) சீவகசிந்தாமணி | – 3. | அற இலக்கியம் |
| (D) குறுந்தொகை | – 4. | தற்கால இலக்கியம் |

a) 4 3 2 1
b) 3 4 1 2
c) 1 2 3 4
d) 2 3 4 1
e) விடை தெரியவில்லை

40. செய்யுளின் முதலில் அமைந்துள்ள சொல்லும், இறுதியில் அமைந்துள்ள சொல்லும் பொருள்படப் பொருந்துவது ___________ ஆகும்.
a) தாப்பிசைப் பொருள்கோள்
b) கொண்டுகூட்டுப் பொருள்கோள்
c) விற்பூட்டுப் பொருள்கோள்
d) மொழிமாற்றுப் பொருள்கோள்
e) விடை தெரியவில்லை

41. "புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின் வலவன் ஏவா வான ஊர்தி" என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது ?
a) அகநானூறு
b) புறநானூறு
c) குறுந்தொகை
d) நற்றிணை
e) விடை தெரியவில்லை

42. பின்வருவனவற்றுள் சரியான கூற்று/கூற்றுகளைத் தேர்வு செய்க:
I. குடும்ப விளக்கின் ஆசிரியர் பாரதியார்
II. கல்வி இல்லாத பெண்கள் களர் நிலம் என்றவர் பாரதியார்
a) I மற்றும் II சரி
b) I மற்றும் II தவறு
c) I சரி II தவறு
d) I தவறு II சரி
e) விடை தெரியவில்லை

43. பின்வருவனவற்றுள் சரியான கூற்று/கூற்றுகளைத் தேர்வு செய்க:
I. அது, இது என்னும் சுட்டுப்பெயர்களின் பின் வல்லினம் மிகாது
II. விளித் தொடர்களின் பின் வல்லினம் மிகும்
a) I மற்றும் II சரி
b) I மற்றும் II தவறு
c) I சரி II தவறு
d) I தவறு II சரி
e) விடை தெரியவில்லை

44. பின்வருவனவற்றுள் சரியான கூற்று/கூற்றுகளைத் தேர்வு செய்க:
I. நா. காமராசனின் கவிதை நூல் "கருப்பு மலர்கள்"
II. சிற்பியின் சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற நூல் "ஒரு கிராமத்து நதி"
a) I மற்றும் II சரி
b) I மற்றும் II தவறு
c) I சரி II தவறு
d) I தவறு II சரி
e) விடை தெரியவில்லை

45. செய்தி எனும் சிறுகதை எந்த தொகுப்பில் இடம்பெற்றுள்ளது ?
a) சிவப்பு ரிக்ஷா
b) மின்சாரப்பூ
c) அன்பளிப்பு
d) ஒரு சிறு இசை
e) விடை தெரியவில்லை

46. யாதும் ஊரே யாவரும் கேளீர் - என்று கூறியவர் யார்?
a) கணியன் பூங்குன்றனார்
b) கம்பர்
c) ஔவையார்
d) பாரதியார்
e) விடை தெரியவில்லை

47. பின்வருவனவற்றுள் சரியான கூற்று/கூற்றுகளைத் தேர்வு செய்க:
I. "முதல் ஆசிரியர்" என்ற நூலின் ஆசிரியர் மலாலா
II. "கல்வியில் நாடகம்" என்ற நூலின் ஆசிரியர் பிரளயன்
a) I மற்றும் II சரி
b) I மற்றும் II தவறு
c) I சரி II தவறு
d) I தவறு II சரி
e) விடை தெரியவில்லை

48. "கல்லும் உலோகமும் செங்கல்லும் மரமும் மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்" என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் ?
a) சிலப்பதிகாரம்
b) சீவகசிந்தாமணி
c) திவாகர நிகண்டு
d) பிங்கல நிகண்டு
e) விடை தெரியவில்லை

49. பல்லவர்கள் காலச் சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டு ?
a) மாமல்லபுரம்
b) திருமயம்
c) தாராசுரம்
d) திருவரங்கம்
e) விடை தெரியவில்லை

50. பின்வரும் எந்த கோவிலில் காணப்படும் சிற்பங்கள் பாண்டியர் காலச் சிற்பக்கலைக்குச் சான்றுகளாகும்?
a) தஞ்சை பெரிய கோவில்
b) கழுகுமலை வெட்டுவான் கோவில்
c) மாமல்லபுரம் கடற்கரை கோவில்
d) கங்கை கொண்ட சோழபுரம் கோவில்
e) விடை தெரியவில்லை

51. பின்வருவனவற்றுள் சரியான கூற்று/கூற்றுகளைத் தேர்வு செய்க:
I. கங்கை கொண்ட சோழபுரம் முதலாம் இராசேந்திரனால் கட்டப்பட்டது.
II. தாராசுரம் ஐராவதீசுவரர் கோவிலைக் கட்டியவர் முதலாம் இராசராசன்.
a) I மற்றும் II சரி
b) I மற்றும் II தவறு
c) I சரி II தவறு
d) I தவறு II சரி
e) விடை தெரியவில்லை

52. பின்வருவனவற்றுள் தவறான கூற்றுகளைத் தேர்வு செய்க:
a) மூன்றாம் வேற்றுமை உருபுகளின் பின் (ஒடு, ஓடு) வல்லினம் மிகாது
b) எட்டு, பத்து தவிரப் பிற எண்களுக்குப் பின் வல்லினம் மிகாது
c) வியங்கோள் வினைமுற்று, இரட்டைக் கிளவி மற்றும் அடுக்குத் தொடர்களின் பின் வல்லினம் மிகாது
d) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் தவிரப் பிறபெயரெச்சங்களின் பின் வல்லினம் மிகும்.
e) விடை தெரியவில்லை

53. " விதையாமை நாறுவ வித்துஉள; மேதைக்கு உரையாமை செல்லும் உணர்வு" என்ற பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது ?
a) சிறுபஞ்சமூலம்
b) யசோதர காவியம்
c) பெரியபுராணம்
d) மதுரைக்காஞ்சி
e) விடை தெரியவில்லை

54. பின்வருவனவற்றுள் சரியான கூற்று/கூற்றுகளைத் தேர்வு செய்க:
I. ஓரறிவு உயிருக்கு எடுத்துக்காட்டு புல், மரம்
II. மூவறிவு உயிருக்கு எடுத்துக்காட்டு கரையான், எறும்பு
a) I மற்றும் II சரி
b) I மற்றும் II தவறு
c) I சரி II தவறு
d) I தவறு II சரி
e) விடை தெரியவில்லை

55. பின்வருவனவற்றில் தவறானது எது?
a) சுவையுணரா - சுவை + உணரா
b) வாயுணர்வு - வாய் + உணர்வு
c) செவிக்குணவு - செவிக்கு + உணவு
d) காடிதனை - காடி + இதனை
e) விடை தெரியவில்லை

56. தமிழ்நாடு அரசு சிற்பக்கல்லூரியை எங்கு நடத்தி வருகிறது?
a) கும்பகோணம்
b) தஞ்சாவூர்
c) மதுரை
d) மாமல்லபுரம்
e) விடை தெரியவில்லை

57. யாருடைய ஆட்சிக்காலத்தில் கோவில் கோபுரங்கள் உயரமாக கட்டப்பட்டது ?
a) சேர மன்னர்கள்
b) விஜய நகர மன்னர்கள்
c) சோழ மன்னர்கள்
d) பல்லவ மன்னர்கள்
e) விடை தெரியவில்லை

58. “கிளிக்கு றெக்கை இருக்கும் வரைக்கும் கிழக்கு வானம் தூரமில்லை” என்ற கவிதையை இயற்றியவர் யார் ?
a) வைரமுத்து
b) பாரதியார்
c) பாரதிதாசன்
d) கண்ணதாசன்
e) விடை தெரியவில்லை

59. ஒரு சராசரி மனிதனுடைய நாக்கில் எத்தனை சுவை அரும்புகள் உள்ளன ?
a) 8000
b) 9000
c) 7000
d) 5000
e) விடை தெரியவில்லை

60. நாயக்கர் காலச் சிற்பங்களில் உச்சநிலை படைப்பு எனக் கருதப்படும் சிற்பங்கள் அமைந்துள்ள கோவில் எது ?
a) கோயம்புத்தூருக்கு அருகில் உள்ள பேரூர் சிவன் கோவில்
b) தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவில்
c) தாராசுரம் ஐராவதீஸ்வரர் கோவில்
d) புதுக்கோட்டை நார்த்தாமலை கோவில்
e) விடை தெரியவில்லை

61. “அருவிய முருகியம் ஆர்ப்பப் பைங்கிளி பருகிய தமிழிசை பாடப் பொன்மயில்” என்ற பாடலின் ஆசிரியர் யார்?
a) வெள்ளி வீதியார்
b) பேயனார்
c) நரிவெரூத் தலையார்
d) புலவர் குழந்தை
e) விடை தெரியவில்லை

62. ஓ, என் சமகாலத் தோழர்களே என்ற கவிதையின் ஆசிரியர் யார்?
a) கண்ணதாசன்
b) பாரதியார்
c) வைரமுத்து
d) பாரதிதாசன்
e) விடை தெரியவில்லை

63. “பொங்கியும் பொலிந்தும் நீண்ட புதுப்பிடர் மயிர்சி லிர்க்கும்” என்ற பாடல் வரிகளின் ஆசிரியர் யார்?
a) பாரதிதாசன்
b) பாரதியார்
c) வாணிதாசன்
d) கண்ணதாசன்
e) விடை தெரியவில்லை

64. பொருத்துக.

| | | |
|---|---|---|
| (A) பூவை | – 1. | தானியக்குவியல் |
| (B) பொலம் | – 2. | காடு |
| (C) கடறு | – 3. | நாகணவாய்ப் பறவை |
| (D) பொலி | – 4. | அழகு |

a) 3 4 2 1
b) 3 1 2 4
c) 4 3 2 1
d) 2 3 4 1
e) விடை தெரியவில்லை

65. பின்வருவனவற்றுள் சரியான கூற்று/கூற்றுகளைத் தேர்வு செய்க:
I. முடியாது பெண்ணாலே என்கின்ற மாயையினை முடக்க எழுந்தவர் -பாரதியார்
II. விடியாது பெண்ணாலே என்கின்ற கேலியினை மிதித்துத் துவைத்தவர் - பாரதியார்
a) I மற்றும் II சரி
b) I மற்றும் II தவறு
c) I சரி II தவறு
d) I தவறு II சரி
e) விடை தெரியவில்லை

66. பின்வரும் சொற்பொருளில் சரியில்லாதது எது?
a) பிழைத்துணர்ந்தும் - தவறாக உணர்ந்திருந்தாலும்
b) பேதைமை - அறியாமையின்பாற்பட்ட தீயசொற்கள்
c) ஈண்டிய – போன்றதே
d) இழைத்துணர்ந்து - நுட்பமாக ஆராய்ந்து
e) விடை தெரியவில்லை

67. பின்வருவனவற்றுள் சரியான கூற்று/கூற்றுகளைத் தேர்வு செய்க:
I.“மாக்கடல்” என்பதற்கான இலக்கணக்குறிப்பு உரிச்சொல் தொடர்
II. “பொன்னேபோல்” என்பதற்கான இலக்கணக்குறிப்பு உவம உருபு
a) I மற்றும் II சரி
b) I மற்றும் II தவறு
c) I சரி II தவறு
d) I தவறு II சரி
e) விடை தெரியவில்லை

68. பின்வருவனவற்றுள் சரியான கூற்று/கூற்றுகளைத் தேர்வு செய்க:
I. இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் பொது நூலகம் சரஸ்வதி மஹால் நூலகம்.
II. இந்தியாவின் மிகப்பெரிய நூலகம் கொல்கத்தாவில் அமைந்துள்ளது.
a) I மற்றும் II சரி
b) I மற்றும் II தவறு
c) I சரி II தவறு
d) I தவறு II சரி
e) விடை தெரியவில்லை

69. “கல்லிடைப் பிறந்த ஆறும்
கரைபொரு குளனும் தோயும்” - என்ற பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது ?
a) முத்தொள்ளாயிரம்
b) இராவணக்காவியம்
c) தமிழ்விடு தூது
d) முக்கூடற்பள்ளு
e) விடை தெரியவில்லை

70. பொருத்துக:

| | | |
|---|---|---|
| (A) பைங்கிளி | – 1. | சொல்லிசை அளபெடை |
| (B) முதிரையும் சாமையும் | – 2. | பெயரெச்சம் |
| (C) மன்னிய | – 3. | எண்ணும்மை |
| (D) வெரீஇ | – 4. | பண்புத்தொகை |

a) 4 3 2 1
b) 2 3 4 1
c) 3 4 1 2
d) 1 3 4 2
e) விடை தெரியவில்லை

71. தேன்மழை, துறைமுகம், சுவரும் சுண்ணாம்பும் முதலிய கவிதை நூல்களை இயற்றியவர் யார்?
a) உவமைக் கவிஞர்
b) கவிஞாயிறு
c) புரட்சிக்கவி
d) பாவலர்மணி
e) விடை தெரியவில்லை

72. "மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டும்மா " என்று கூறியவர் யார் ?
a) கவிமணி
b) பாரதிதாசன்
c) வாணிதாசன்
d) திரு.வி.க.
e) விடை தெரியவில்லை

73. தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேறத் துணை நின்றவர் யார்?
a) ஐடாஸ் சோபியா ஸ்கட்டர்
b) மூவலூர் இராமாமிர்தம்
c) முத்துலட்சுமி
d) ஜோதிராவ் பூலே
e) விடை தெரியவில்லை

74. “இராவண காவியம் காலத்தின் விளைவு, ஆராய்ச்சியின் அறிகுறி, புரட்சிப் பொறி, உண்மையை உணரவைக்கும் உன்னத நூல்” என்று கூறியவர் யார்?
a) வாணிதாசன்
b) பாரதிதாசன்
c) புலவர் குழந்தை
d) அண்ணா
e) விடை தெரியவில்லை

75. பின்வருவனவற்றுள் சரியான கூற்று/கூற்றுகளைத் தேர்வு செய்க:
I. யாப்பதிகாரம், தொடையதிகாரம் உள்ளிட்ட முப்பதுக்கும் மேற்பட்ட இலக்கண, இலக்கிய நூல்களைப் படைத்தவர் - புலவர் கு.அழகிரி
II. இராவண காவியத்தின் முதன்மை நாயகன் “இராமன்”
a) I மற்றும் II சரி
b) I மற்றும் II தவறு
c) I சரி II தவறு
d) I தவறு II சரி
e) விடை தெரியவில்லை

76. “கதிரொளி தீபம் கலசம் உடனேந்தி
சதிரிள மங்கையர் தாம்வந்து எதிர்கொள்ள” என்ற பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?
a) நாச்சியார் திருவந்தாதி
b) நாச்சியார் திருமொழி
c) இரண்டாம் திருமொழி
d) முதலாம் திருமொழி
e) விடை தெரியவில்லை

77. பின்வருவனவற்றுள் சரியான கூற்று/கூற்றுகளைத் தேர்வு செய்க:

I. இறைவனுக்குப் பாமாலையோடு பூமாலையும் சூடியவர் ஆண்டாள்.

II. சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என அழைக்கப்பட்டவர் ஆண்டாள்.

a) I மற்றும் II சரி

b) I மற்றும் II தவறு

c) I சரி II தவறு

d) I தவறு II சரி

e) விடை தெரியவில்லை

78. இலக்கண முறைப்படி குற்றமுடையது எனினும், இலக்கண ஆசிரியர்களால் குற்றமன்று என ஏற்றுக்கொள்ளப்படுவது எது?

a) இலக்கணப் போலி

b) வழாநிலை

c) வழு

d) வழுவமைதி

e) விடை தெரியவில்லை

79. நாச்சியார் திருமொழி மொத்தம் எத்தனை பாடல்களைக் கொண்டது?

a) 143

b) 100

c) 120

d) 145

e) விடை தெரியவில்லை

80. பின்வரும் இலக்கணக்குறிப்பில் சரியில்லாதது எது?

a) மல்லல் நெடுமதில் - உரிச்சொற்றொடர்

b) நெடுமதில் - வினையெச்சம்

c) வாங்குவில், உயர்துலை - வினைத்தொகை

d) குறையா வன்கண் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

e) விடை தெரியவில்லை

81. தி. ஜானகிராமன் தனது ஜப்பான் பயண அனுபவங்களை உதயசூரியன் என்னும் தலைப்பில் எந்த வார இதழில் எழுதினார்?

a) இந்தியா

b) சுதேசமித்திரன்

c) விஜியா

d) பெரியார்

e) விடை தெரியவில்லை

82. சுண்ணாம்புக் கலவை (சுதைச் சிற்பங்கள்) இருந்ததை எந்த நூல் மூலம் அறிய முடிகிறது?

a) மணிமேகலை

b) புறநானூறு

c) நற்றினை

d) சீவகசிந்தாமணி

e) விடை தெரியவில்லை

83. கீழ்க்காணும் சொற்களை அகர வரிசைப்படுத்துக:

சுற்றம், சீர்தூக்கு, சிந்தனை, சாட்டை, சங்கு

a) சீர்தூக்கு, சங்கு, சிந்தனை, சாட்டை, சுற்றம்

b) சிந்தனை, சீர்தூக்கு, சங்கு, சுற்றம், சாட்டை

c) சாட்டை, சுற்றம், சீர்தூக்கு, சிந்தனை, சங்கு

d) சங்கு, சாட்டை, சிந்தனை, சீர்தூக்கு, சுற்றம்

e) விடை தெரியவில்லை

84. இலக்கண முறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் ____________ எனப்படும்.

a) இலக்கணப் போலி

b) வழாநிலை

c) வழு

d) வழுவமைதி

e) விடை தெரியவில்லை

85. பின்வருவனவற்றுள் புணர்மொழியின் இயல்பு பற்றிய கூற்றுகளில் சரியானது எது?

I. உயிரீறு என்பதற்கு எ.கா. கலை + அழகு

II. உயிர்முன் மெய் என்பதற்கு எ.கா. பனிக்காற்று

a) I மற்றும் II சரி

b) I மற்றும் II தவறு

c) I சரி II தவறு

d) I தவறு II சரி

e) விடை தெரியவில்லை

86. நிலைமொழி ஈற்றில் "இ,ஈ,ஐ" ஆகிய எழுத்துக்கள் வந்து வருமொழியில் உயிரெழுத்துக்கள் வந்தால் உடம்படு மெய்யாக வரும் எழுத்து எது?

a) வ்

b) ய்

c) ங்

d) ஞ்

e) விடை தெரியவில்லை

87. பின்வருவனவற்றுள் சரியான கூற்று/கூற்றுகளைத் தேர்வு செய்க:

I. வன்தொடர்க் குற்றியலுகரத்திற்கு எ.கா. நாக்கு

II. மென்தொடர்க் குற்றியலுகரத்திற்கு எ.கா. வரலாறு

a) I மற்றும் II சரி

b) I மற்றும் II தவறு

c) I சரி II தவறு

d) I தவறு II சரி

e) விடை தெரியவில்லை

88. பொதுவர்கள் பொலிஉறப் போர் அடித்திடும் நிலப்பகுதி எது?

a) மருதம்

b) நெய்தல்

c) பாலை

d) முல்லை

e) விடை தெரியவில்லை

89. " எத்தனை பெரிய வானம்! எண்ணிப்பார் உனையும் நீயே " என்ற பாடலின் ஆசிரியர் யார்?

a) பாரதிதாசன்

b) பாரதியார்

c) முடியரசன்

d) வாணிதாசன்

e) விடை தெரியவில்லை

90. பின்வருவனவற்றுள் சரியான கூற்று/கூற்றுகளைத் தேர்வு செய்க:

I. ‘நட்புக்காலம்’ என்ற நூலின் ஆசிரியர் கிருபானந்த வாரியார்

II. ‘திருக்குறள் கதைகள்’ என்ற நூலின் ஆசிரியர் அறிவுமதி

a) I மற்றும் II சரி

b) I மற்றும் II தவறு

c) I சரி II தவறு

d) I தவறு II சரி

e) விடை தெரியவில்லை

91. " அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு" இக்-குறட்பாவில் பயின்றுவரும் அணி யாது?

a) ஏகதேச உருவக அணி

b) எடுத்துக்காட்டு உவமையணி

c) உருவக அணி

d) தற்குறிப்பேற்ற அணி

e) விடை தெரியவில்லை

92. வினைமுற்று, வினையைக் குறிக்காமல் வினை செய்தவரைக் குறிப்பது ____________ எனப்படும்.

a) வினைத்தொகை

b) வினையெச்சம்

c) வினையாலணையும் பெயர்

d) வியங்கோள் வினைமுற்று

e) விடை தெரியவில்லை

93. யார் வேண்டுகோளுக்கிணங்க புலவர் குழந்தை திருக்குறளுக்கு 25 நாட்களில் உரை எழுதினார் ?

a) பாரதியார்

b) பெரியார்

c) பாரதிதாசன்

d) அண்ணா

e) விடை தெரியவில்லை

94. "ஒரு சிறு இசை" என்ற சிறுகதைக்காக 2016-ம் -ஆண்டு சாகித்திய அகாதெமி விருது பெற்றவர் யார்?

a) கு. அழகிரிசாமி

b) தி. ஜானகிராமன்

c) ஆதவன்

d) வண்ணதாசன்

e) விடை தெரியவில்லை

95. " முத்துடைத்தாமம் " இலக்கணக்குறிப்பு தருக:

a) பண்புத்தொகை

b) இரண்டாம் வேற்றுமைத் தொகை

c) உவமைத்தொகை

d) உரிச்சொல் தொடர்

e) விடை தெரியவில்லை

96. மூவேந்தர்களின் ஆட்சிச்சிறப்பு, படைச்சிறப்பு, போர்த்திறன், கொடை முதலிய செய்திகளை எந்நூல் கூறுகிறது?

a) கலிங்கத்துப்பரணி

b) பழமொழி நானூறு

c) இனியவை நாற்பது

d) முத்தொள்ளாயிரம்

e) விடை தெரியவில்லை

97. தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் சிற்பக்கலை பற்றி வெளியிட்டுள்ள நூல் எது?

a) சிற்பச் செந்நூல்

b) சிற்பக்கலை நூல்

c) சிற்பக் கவிதை நூல்

d) கவின் கலை செந்நூல்

e) விடை தெரியவில்லை

98. சரியான பொருளைத் தேர்வு செய்க:

‘கல்லில் நார் உரித்தல்’

a) ஆராய்ந்து பாராமல் செய்தல்

b) இருப்பது போல் தோன்றும்; ஆனால் இருக்காது

c) இயலாத காரியம்

d) நீண்ட காலமாக இருப்பது

e) விடை தெரியவில்லை

99. பொருத்துக:

(A) கார் காலம் -1. ஐப்பசி, கார்த்திகை

(B) குளிர் காலம் -2. மாசி, பங்குனி

(C) முன் பனிக்காலம் -3. ஆவணி, புரட்டாசி

(D) பின் பனிக்காலம் -4. மார்கழி, தை

a) 3 1 4 2

b) 1 3 4 2

c) 2 4 1 3

d) 4 2 3 1

e) விடை தெரியவில்லை

100. பின்வரும் இலக்கணகுறிப்பில் சரியில்லாதது எது?

a) தளிர்க்கை - உவமைத் தொகை

b) பழந்தமிழ், சிற்றினம், பெருங்குணம் - பண்புத்தொகைகள்

c) வழங்கி - பெயரெச்சம்

d) கற்றல், பெறுதல், வாழ்தல் – தொழிற்பெயர்கள்

e) விடை தெரியவில்லை